சாட்சிய வாக்குமூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஷிதா)

1989 ம் ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

(வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம்.

திருவாரூர்-610 001

தேதி: 26.02.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 06/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-17 |
| சாட்சியின் பெயர் | : | இலக்கியா |
| கணவர் பெயர் | : | ராஜசேகரன் |
| கிராமம் | : | காந்தி நகர், காட்பாடி |
| தாலுக்கா | : | காட்பாடி |
| தொழில் | : | காவல் துணை கண்காணிப்பாளர் |
| வயது | : | 32 |

(இந்த சாட்சியம் காணொளி வாயிலாக பதிவு செய்யப்பட வேண்டுமென அரசு தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள் கடிதம் ஏற்கப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சி காணொளி வாயிலாக பதிவு செய்யப்படுகிறது. இதனால் சாட்சியானவர் வேலூர் மாவட்ட நீதிமன்ற காணொளி அறையில் முன்னிலையாகியுள்ளார். இதன் பொருட்டு வேலூர் மாவட்ட நீதிமன்றதில் இ-சேவா கேந்திரா பணிபுரியும் தகுதி வாய்ந்த ஒருங்கிணைப்பாளரான திருமதி.M.புவனேஷ்வரி அவர்கள் முன்னிலையில் இவ்வழக்கு சாட்சியின் பெயர், முகவரி மற்றும் அடையாளம் ஆகியவை சாட்சிக்கு அனுப்பப்பட்டுள்ள சாட்சிய அழைப்பாணையுடன் ஒப்பிட்டு இன்னார் என அடையாளம் காட்டி பிரமாணம் செய்து வைத்ததன் பேரில் இவ்வழக்கு சாட்சியம் காணொளி காட்சி மூலம் இந்நீதிமன்றத்தில் பதிவு செய்யப்படுகிறது.)

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது போதை பொருள் நுண்ணறிவு பிரிவில் வேலூரில் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பாக நன்னிலம் உட்கோட்டத்தில் காவல் துணை காண்காணிப்பாளராக இருந்த போது 30.09.2022 ஆம் தேதி குடவாசல் காவல் நிலைய பொறுப்பில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் ராதாகிருஷ்ணன் அவர்கள் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் படி அங்கு உள்நோயாளியாக இருந்த 51 புதுக்குடி, மேலத்தெரு முருகநாதன் மகன் ஆனந்த் என்பவரிடம் வாக்குமூலம் பெற்று குடவாசல் காவல் நிலைய குற்ற எண்.497/2022 -ல் சட்டப்பிரிவு 294(பி), 324, 506(2) of IPC r/w 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (PoA) Act-ன் கீழ் வழக்கினை பதிவு செய்தார். அதை எனது பார்வைக்கு சமர்ப்பித்தார். இவ்வழக்கினை மேல் விசாரணை செய்ய திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல் முறை ஆணை C.No. 99/SJ&HR/TVR/2022, dated: 30.09.2022 ன் உத்தரவு படி அன்றைய தினமே வழக்கினை எனது மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று பார்வையிட்டேன். அந்த செயல் முறை ஆணை **அ.சா.ஆ-13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அன்றைய தினமே பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகள் அ.சா-9 பாஸ்கர் மற்றும் அ.சா-10 பாப்பையன் ஆகியோரிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ-14** ஆகவும், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ-15** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

2. பின்னர் சம்பவ இடத்தில் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை தனி தனி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்ததில் சம்பவம் உண்மை என தெரிய வந்து எதிரிகளை தேடினேன். எதிரிகள் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின் படி தஞ்சாவூர் முதலாவது மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் சரணடைந்து பிணை மனு தாக்கல் செய்து பிணையில் சென்ற விபரம் தெரிந்து கொண்டேன்.

3. பின்னர் காயம் பட்ட சாட்சிகள் அ.சா-1 மற்றும் அ.சா-2 ஆகியோர்களை சிகிச்சைக்கு அனுமதித்த மருத்துவர் அ.சா-11 சிவராமன் என்பவரை விசாரித்து

வாக்குமூலம் பெற்றேன். பின்னர் அ.சா-1 க்கு காயச்சான்று வழங்கிய மருத்துவர் அ.சா-12 சக்திபாலன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று அவர் வழங்கிய சான்றிதழை பெற்றுக்கொண்டேன். அ.சா-2 க்கு காயச்சான்று வழங்கிய மருத்துவர் அ-சா.15 நடராஜ சேதுபதி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று அவர் வழங்கிய சான்றிதழை பெற்றுக்கொண்டேன்.

4. எதிரிகள் 1 மற்றும் 2 ஆகியோர்களுக்கு சாதி சான்றிதழ் வழங்கிய குடவாசல் சிறப்பு வட்டாட்சியர் அ.சா-14 சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று அவர் வழங்கிய சாதி சான்றிதழை பெற்றுக்கொண்டேன். பின்னர் சாட்சிகள் அ.சா-1 மற்றும் அ.சா-2 ஆகியோர்களுக்கு சாதி சான்றிதழ் வழங்கிய குடவாசல் வட்டாட்சியர் அ.சா-13 குருநாதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று அவர் வழங்கிய சாதி சான்றிதழை பெற்றுக்கொண்டேன். பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் 1 மற்றும் 2 ஆகியோர் மீது சட்டப்பிரிவு 294(பி), 324, 506(2) of IPC r/w 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (PoA) Act-ன் கீழ் 26.10.2022 ஆம் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

5. மேலும் எனது விசாரணையில் அ.சா-4 சுபாஷ் சந்திரபோஸ், அ.சா-5 பாலமுருகன், அ.சா-6 புகழேந்தி, அ.சா-7 சாமிநாதன், அ.சா-8 செல்வசண்முகம், அ.சா-9 பாஸ்கர், அ.சா-10 பாப்பையன் ஆகியோர்கள் எனது விசாரணையில் கூறியதை தான் நான் வாக்குமூலமாக பதிவு செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

2 ம் எதிரி ஒரு புகார் கொடுத்துள்ளார் என்றும், அந்த புகாரின் படி குற்ற எண். 498/2022 என்ற வழக்கு இருப்பது தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும், பார்வை மகஜர், வாக்குமூலங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கை சரியாக புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் புகார் வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த விதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

(சாட்சியம் முடிந்த பின்னர் பதிவு செய்யப்பட்ட முதல் மற்றும் குறுக்கு விசாரணை வாக்குமூலம் அச்சு நகல் செய்யப்பட்டு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு மறுமுனையில் வேலூர் மாவட்ட நீதிமன்றதில் இ-சேவா கேந்திரா பணிபுரியும் தகுதி வாய்ந்த ஒருங்கிணைப்பாளரான திருமதி.M.புவனேஷ்வரி அவர்களால் பதிவிறக்கம் செய்யப்பட்டு பிரிண்ட அவுட் எடுக்கப்பட்டு சாட்சியின் கையொப்பம் பெறப்பட்டு, இந்நீதிமன்றத்திற்கு பின்னர் தபாலில் அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டது. இவற்றிற்கு ஆதரவாக, ஒருங்ணைப்பாளரும் கையொப்பம் செய்து அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டது.)

இன்று 26.02.2026 மறுமுனையில் அங்கீகரிக்கதக்க ஒருங்கிணைப்பாளர் உதவியுடன் என் முன்னிலையில் காணொலி காட்சி மூலம் சாட்சி ஆஜராகி, சாட்சியம் சொல்ல சொல்ல கணினி தட்டச்சு மூலம் பதிவு செய்யப்பட்டு, முழு சாட்சியம் அடங்கிய PDF File சாட்சிக்கு அவர் ஆஜராகியுள்ள மறுமுனைக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு, மறுமுனையில் அதை ஒருங்கிணைப்பாளர் பதிவிறக்கம் செய்து பிரிண்ட் அவுட் எடுத்து, அதனை சாட்சி படித்துப்பார்த்து, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, மறுமுனை ஒருங்கிணைப்பாளர் முன்னிலையில் கையொப்பம் செய்தும், பின்னர் இந்நீதிமன்றத்திற்கு தபால் மூலமாக அவற்றை அனுப்பி வைக்க உத்தரவிடப்பட்டது. அவ்வாறே அசல் சாட்சிய வாக்குமூலம் இந்நீதிமன்றத்தில் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டு என்னால், கையொப்பம் செய்யப்பட்டது.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.02.26 15:53:38 +0530

அமர்வு நீதிபதி,

பட்டியல் வகுப்பினர் மற்றும்

பழங்குடியினருக்கான (வன்கொடுமை தடுப்பு)

வழக்குகளை விசாரிப்பதற்கான

சிறப்பு நீதிமன்றம்,

திருவாரூர்.